உள்ளாட்சித் தேர்தல் 2011 அவசரம்

சுற்றறிக்கை எண். C.38/2011


# தமிழ்நாடு
# மாநில தேர்தல் ஆணையம்

208/2, ஜவஹர்லால் நேரு சாலை
அரும்பாக்கம், சென்னை 600 106.

வே.மு.சேவியர் கிறிசோ நாயகம், இ.ஆ.ப.,
செயலாளர்


ந.க.எண்.6790/2011-1/தே-1, நாள் 22.9.2011
புரட்டாசி 5, திருவள்ளுவர் ஆண்டு 2042

பெறுநர்

அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
மாவட்டத் தேர்தல் அலுவலர்/ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை 3
அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள்
.. தொடர்புடைய மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் மூலமாக.

அய்யா/அம்மையீர்,

பொருள் தேர்தல்கள்- உள்ளாட்சித் தேர்தல் 2011- ஊரகம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் - திருநங்கையர்கள் தேர்தலில் போட்டியிடுதல் - அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை ஆர். ஐயப்பன் (என்கின்ற) திருநங்கை ஆர். ராஜேஸ்வரி, அரங்கநாதபுரம், மேற்கு தாம்பரம், சென்னை 45 அவர்களின் கடிதம் நாள் குறிப்பிடப்படவில்லை.

* * *

திருநங்கையர்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இவ்வாணையத்தில் விண்ணப்பித்திருந்ததன் அடிப்படையில் பின்வருமாறு தெளிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடத்திற்கு திருநங்கையர்கள் வேட்புமனு தாக்கல் செய்கையில் வாக்காளர் பட்டியல்களில் உள்ள திருநங்கையர்களின் பாலினப் பதிவுகளைக் கொண்டு முடிவு செய்வதைத் தவிர்த்து திருநங்கையர்களின் விருப்ப உரிமையின் அடிப்படையில் முடிவு செய்யலாம்.

2. ஒரு குறிப்பிட்ட பிரிவினைச் சார்ந்த, அதாவது ஆதிதிராவிடர்/பழங்குடியினர் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பின் அவர் அந்த குறிப்பிட்ட பிரிவினரைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/- வே.மு. சேவியர் கிறிசோ நாயகம்
செயலாளர்

நகல்

மாநிலத் தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர்/இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை 15
மாநிலத் தேர்தல் அலவலர்/பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108
மாநிலத் தேர்தல் அலுவலர்/ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை 5
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் / அனைத்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை -9.
அரசுச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, சென்னை - 9.
மக்கள் தொடர்பு அலுவலர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்
தேர்தல் பொது 1, ந.தே.1, ஊ.தே.2 - பிரிவு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்
இருப்பு கோப்பு / உபரி நகல்கள்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்

user26\g:\cir-comn-38-11-thirunangai.doc